Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 308

வெள்ளிக்கிழமை
30 செப்ரெம்பர் 2022

புரட்டாதி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

வவுனியா, செப். 30
வவுனியா - தாலிக்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் பரிதாபமாக 11

'ரிக்ரொக்' படுத்தும் பாடு

# உளவள சிகிச்சையில் 10 சிறுமிகள் அனுமதி

## பெற்றோரே உஷார்!!

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 30**
**'ரிக்ரொக்' செயலிக்கு அடிமையாகி, அதன்மூலம் காதல் வயப்பட்ட 10 சிறுமிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் உளவளச் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.** 11

## மாணவர்களை நோயாளராக்கும் இணையவழி விளையாட்டுக்கள்

### எதிர்காலமே ஆபத்தில் என்று மருத்துவர் கீதாஞ்சலி எச்சரிக்கை

யாழ்., செப். 30
யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் இணைய விளையாட்டுக்களுக்கு அடிமையாகி - சிகிச்சைக்கு வரும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன், அலைபேசிகளை அதிகளவில் பயன்படுத்தும் மாணவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்களும் பதிவாகியுள்ளன 11



**முச்சந்தி முரளி**

**"உந்தக் ஹெரோயினைப் போல செல்போனும் பிள்ளையளை நாசமாக்கிற பொல்லாத போதை கண்டியளோ"**

## தீக்காயங்களுக்கு உள்ளான குடும்பப் பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 30
தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 24ஆம் திகதி சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட கிங்ஸ்லி தனுசியா (வயது - 29) என்ற இளம் குடும்பப்பெண் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். 11

வண்ணார்பண்ணைப் பகுதியில்

## நான்கு வீடுகள் மீது நேற்றுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 30
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியில் நான்கு வீடுகள் மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. 11

இலங்கைக்கு

## ஐரோப்பிய ஒன்றியம் 1.5 மில். யூரோ உதவி!

கொழும்பு, செப். 30
இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவுவதற்கென 1.5 மில்லியன் யூரோ நிதியுதவியை இலங்கைக்கு வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. 11

## கள்வர்களின் கண்களையே ஏமாற்றிய 'கவரிங்'நகைகள்!

### அராலியில் சுவாரஸிய சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 30
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மேற்குப் பகுதியில், பட்டப்பகலில் வீடுடைத்து உள்நுழைந்த திருடர்கள், தங்க நகைகள் என்று நினைத்து 'கவரிங்' நகைகளைத் திருடிச் சென்ற சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- குறித்த வீட்டில் இருந்த கணவனும் மனைவியும் தத்தம் தொழில் நிமித்தம் வெளியே சென்றிருந்த நிலையில், இதைச் சந்தர்ப்பமாகப் 10

உரும்பிராய் கிழக்கில்

## 12 பவுண் நகைகள் வீடுடைத்து திருட்டு!

யாழ்ப்பாணம், செப். 30
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் கிழக்குப் பகுதியில் நேற்று நண்பகல் வீடொன்று உடைக்கப்பட்டு 12 பவுண் நகைகள் 10

## இலங்கையில் நல்லிணக்கம் மிகவும் சவாலான விடயமே!

### நெதர்லாந்துத் தூதுவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 30
இலங்கையில் நல்லிணக்கப்பொறிமுறைக்கு ஏதுவான பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குவதுடன் அதற்குத் தலைமைதாங்கவேண்டிய முக்கியமான கடமை அரசாங்கத்துக்கு இருக்கின்றது என்று வலியுறுத்தியுள்ளார் இலங்கைக்கான 11

## உக்ரைனின் நான்கு பகுதிகள் ரஷ்யாவுடன் இன்று இணைவு!

### பதற்றம் மேலும் உச்சம்

கொழும்பு, செப். 30
உக்ரைனின் நான்கு பகுதிகள் இன்று ரஷ்யாவுடன் இணைத்துக்கொள்ளப்படும் என்று ரஷ்யா அறிவித்துள்ளது. இதற்கு உக்ரைனும் மேற்கத்தேய 11

# தமிழரைத் தொடர்ந்து ஏமாற்றாமல் இதயசுத்தியுடன் செயற்படுங்கள்!

### ரணில் அரசாங்கத்துக்கு சம்பந்தன் வலியுறுத்து



கொழும்பு, செப். 30
'நாங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றோம்; அதற்கான பேச்சை விரைவில் ஆரம்பிக்கப் போகின்றோம்' என்றுகூறி தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றாமல், பேச்சுக்களை இதயசுத்தியுடன் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
'தேசியப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்கொல்லி போதைப்பாவனை வேரறுப்பதற்கு ஒன்றிணைவோம்

## யாழ்.போதனா சமூகத்தினரால் நடைபயணம் கோரிக்கைகள் அடங்கிய மனு கையளிப்பு

**யாழ்ப்பாணம், செப். 30**

**வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் உயிர்கொல்லியான ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் முகமாக விழிப்புணர்வு நடைபயணம் நேற்று யாழ். போதனா மருத்துவமனை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பால் முன்னெடுக்கப்பட்டது.**

இந்த நடைபவனி நண்பகல் 12 மணியளவில் மருத்துவமனை முன்றிலில் ஆரம்பமாகி மணிக்கூட்டுக் கோபுர வீதியூடாக, யாழ்.பொலிஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து பிரதான வீதியூடாக கச்சேரியை வந்தடைந்து யாழ்.மாவட்ட செயலரிடம் மருத்துவமனை சமூகத்தினரால் மனு கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

உயிர்கொல்லி போதைப்பொருள் விநியோக வலையமைப்பு, போதைப்பொருள் விநியோகம், இளம் சமுதாயத்தைப் போதைப்பொருளுக்கு அடிமையாக்குதல் போன்ற சமூக அழிப்பு செயற்பாடுகள் எமது பிராந்தியத்தில் விரிவாக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளம் சந்ததியினரே இதற்கு குறிவைக்கப்படுகின்றனர். மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்படும் போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

வடமாகாணத்தில் இளையோரின் வளமான வாழ்க்கை சீரழிக்கப்படுகிறது. பொருளாதாரம் சிதைக்கப்படுகிறது. போதைப்பொருள் பாவனையிலிருந்து இளம் சந்ததியினரையும் நாட்டையும் காப்பதற்குரிய நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அதன்படி, போதைப்பொருள் தொடர்பான முறைப்பாடுகளை முப்படைகள் விரைந்து விசாரணைக்குட்படுத்த வலியுறுத்த வேண்டும்.

போதைப்பொருள் விநியோகம் தொடர்பான தகவல்களை வழங்குவோரைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

போதைப்பொருள் சம்பந்தமான தகவல்களை தயக்கமின்றிவழங்க அதிபர்கள், ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி அவர்களைப் பாதுகாக்க வழிவகை செய்யவேண்டும்.

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக மக்கள் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து பொலிஸாருடன் இணைந்து போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த உதவியளிக்கப்படுதல் அவசியம்.

போதைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கி, அதன் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதிப்படுத்தல் வேண்டும். வடமாகாணத்தில் போதைப்பொருள் பாவனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுதல் வேண்டும் - என்றுள்ளது. (ச-26)

# பனைசார் கற்கைநெறி முல்லையில் ஆரம்பம்

முல்லைத்தீவு, செப். 30

பனை அபிவிருத்திச் சபையானது பனைசார் உணவு உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டு பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து "பனைசார் உணவுற்பத்தியும் தரக்கட்டுப்பாடும்" என்பது தொடர்பிலான ஆறு மாத தொழிற்பயிற்சி சான்றிதழ் கற்கைநெறியை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறியானது மூன்று மாத விரிவுரை வகுப்புகளாகவும் மூன்று மாத செயன்முறைப் பயிற்சியை உள்ளடக்கியதாகவும் காணப்படும். கற்கைநெறியைப் பயில விரும்பும் 16 தொடக்கம் 35 வயதுள்ள ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் மற்றும் பனைசார் கைத்தொழில் ஊழியர்கள் தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரக்கோவையுடன் இன்று காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு சமுகமளிக்கலாம்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள 0212060042, 0773705896 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14)

# பார்வையற்றோர் உபகரணங்கள் விலை மும்மடங்காக அதிகரிப்பு!

## மாணவர்கள் கல்வியிழக்கும் அபாயம்

கொழும்பு, செப். 30

பார்வையற்றோர் பயன்படுத்தும் தட்டச்சு இயந்திரம் உள்ளிட்ட பல உபகரணங்களின் விலை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவரும் பார்வையற்றோருக்கான தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான பிரசன்ன விக்ரமசிங்க கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பார்வையற்றோர் சமூகம் பயன்படுத்தும் தட்டச்சு இயந்திரத்தின் விலை ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவிலிருந்து 3 லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

பார்வையற்ற குழந்தைகள் கல்விக்காகப் பயன்படுத்தும் பலகையின் விலை சுமார் 300 ரூபாவாக இருந்த நிலையில் தற்போது 3 ஆயிரம் ரூபாவை தாண்டியுள்ளது. அத்தோடு அவற்றுக்கு தட்டுப்பாடும் நிலவுகின்றது.

விசேட தொழில்நுட்ப முறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒலிப் புத்தகங்களைக் கேட்கும் தொழில்நுட்ப சாதனத்தின் விலை 22 ஆயிரம் ரூபாவிலிருந்து 60 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது - என்றார். (ச)

# குருதிச் சோகையால் கர்ப்பிணிகள் பாதிப்பு

## வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, செப். 30


பொருண்மியம் நலிந்த கிராமங்களைச் சேர்ந்த கர்பிணித்தாய்மார்களுக்கு அதிகமாக குருதிச்சோகை ஏற்படுகின்றது என்று வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம். மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய பொருளாதார நிலைக்கு முன்பாக இருந்த காலப்பகுதியிலும் கூட பொருண்மியம் நலிந்த கிராமங்களில் வசிக்கும் தாய்மார்களே குருதிச்சோகையால் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு சுகாதாரத் திணைக்களம் ஊடாக உரிய குருதிப்பரிசோதனையை மேற்கொண்டு அவ்வாறான அறிகுறிகளை கொண்ட தாய்மார்களுக்கு மேலதிக கவனமெடுத்து அதற்கான மாத்திரைகள் வழங்குவதுடன் ஏனைய விடயங்களும் வழங்கப்படுகின்றன.

அது குழந்தை பிறக்கும் போது ஏற்படும் சில பிரச்சினைகளை முடிந்தவரை தவிர்ப்பதற்கு உதவும். இதே வேளை குழந்தை சிறிதான நிறையுடன் பிறப்பதற்கும் தாய்மார்களின் போசாக்கு முக்கிய காரணியாகவுள்ளது. என்றார். (எ-14,113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# முல்லைத்தீவு மருத்துவமனையில் தாடை அறுவைச் சிகிச்சை வெற்றி!

யாழ்ப்பாணம், செப். 30

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் முதன்முறையாக வாய், முகம் மற்றும் தாடை அறுவைச் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது.

கடந்த 27ஆம் திகதி அறுவைச் சிகிச்சை நிபுணர் மருத்துவர் அகிலன் தலைமையிலான குழுவினரால் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவருக்கு 6 மணிநேர முயற்சியில் வெற்றிகரமாக தாடை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-19)

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, செப். 30

கிழக்கு மாகாணத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக மாத்தறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிலாபத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது - என்றுள்ளது. (ச-இ)

## ஆடைகள் ஏற்றுமதியில் வீழ்ச்சி

நான்காவது காலாண்டில் ஆடைகள் மற்றும் தொழில்துறை ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என்று சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியே இதற்கு பிரதான காரணம் என அந்த சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் சுதந்திர வர்த்தக வலயத்தில் அமையப் பெறாத சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்றுறை ஏற்றுமதி நிறுவனங்கள் பல மூடப்பட்டுள்ளன.

இதற்கமைய 15 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன என்றும், சில நிறுவனங்கள் உற்பத்தியை கைவிட்டுள்ளன என்றும் சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (எ-இ)

# கடன் கிடைக்கும் காலத்தை நிச்சயமாகக் கூற முடியாது!

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.30**

**இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 2.9 பில்லியன் டொலர் கடனுக்கு தமது பணிப்பாளர் சபை எப்போது அங்கீகாரம் வழங்கும் என நிச்சயமாகக் கூற முடியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையின் வெற்றியைப் பொறுத்து காலம் தீர்மானிக்கப்படும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதியொருவர் கூறினார். ஆயினும், சர்வதேச நாணய நிதியத்துடன், பணியாளர் மட்ட உடன்பாட்டின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட 2.9 பில்லியன் டொலருக்கு, எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கும் என இலங்கை அரசாங்கம் ஊகிக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர் மற்றும் இலங்கை தலைவர் மசாஹிரோ நோசாகி ஆகியோர் நிக்கி ஏஷியா இணையத்தளத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் இலங்கைக்கான கடன் தொடர்பில் விளக்கமளித்துள்ளனர்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுகளை நேரம் எடுப்பதால், நிதியை வழங்கும் காலக்கெடுவை எதிர்வுகூறுவது மிகவும் கடினம். சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சுக்களை விரைவுபடுத்தவேண்டும். அப்போதுதான், எதிர்கொள்ளும் நெருக்கடியிலிருந்து இலங்கை விரைவாக வெளியேற முடியும் என அந்தக் கடிதத்தில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் தரவுகளுக்கமைய, சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகியவை இலங்கையின் முதன்மையான மூன்று இருதரப்பு கடன் வழங்குநர்களாக உள்ளனர். இலங்கைக்கான மொத்தக் கடனில் சீனா 52 வீதமும், ஜப்பான் 19.5 வீதமும் மற்றும் இந்தியா 12 வீதமும் வழங்கியுள்ளன. (எ-இ)

## காணவில்லை

கிளிநொச்சி, செப். 30

வட்டக்கச்சி, இராமநாதபுரத்தில் வசிக்கும் கணபதிப்பிள்ளை சித்திரவேலாயுதம் என்பவர் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை காணாமற் போயுள்ளார் என தரும புரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போனவர் யாழ்ப்பாணம் கொடிகாமத்தின் ஊடாக அறிவியல் நகர் பேருந்தில் ஏறி கிளிநொச்சி டிப்போ சந்தியில் காலை 8.10 மணிக்கு இறங்கி முற்பகல் 11 மணி வரை அதேஇடத்தில் தடுமாறி நின்றார் என்றும் அவர் கொண்டுசென்ற சாரம் மற்றும் ஊன்றுகோல் என்பன நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி டிப்போ சந்தியில் கண்டெடுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ய-159)

## நினைவேந்தலில் கூட ஒன்றுபடாது தியாகங்கள் குழிதோண்டி புதைப்பு

### ஐங்கரநேசன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், செப். 30

திலீபனின் தூபியை அன்று ஆயுதம் தாங்கிய படையினர் அழித்தார்கள் எஞ்சிய நினைவுகளை இன்று தமிழர்களாகிய நாமே ஒற்றுமைப்படாது அழிக்கின்றோம். இதற்கு நாம் வெட்கித் தலைகுனியவேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

தியாகிதிலீபன் நினைவேந்தலில் நிகழ்ந்த குழப்பங்கள் தொடர்பாக அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்கள் எந்நாளும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். இது வெறுமனே நினைவுகளை மனத்திரையில் மீட்கும் சடங்குகள் அல்ல. மாறாக, அவர்களின் போராட்ட நியாயங்களையும் போராட்டத் தியாகங்களையும் அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துகின்ற உயிர்ப்பான செயற்பாடுகளாகும். அவர்களது நினைவேந்தல்களில் அரசியல் நீக்கம் செய்வது அவர்களின் போராட்ட நியாயங்களைக் குழிதோண்டிப் புதைப்பதாகும்.

நினைவேந்தல் குழப்பங்களுக்கு யார் காரணர் என்ற கேள்விக்கும் அப்பால் இவை நிகழ்ந்திருக்கவே கூடாது என்பது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் வேதனைக் குரலாக வுள்ளது.

திலீபனின் தூபியை அன்று படையினர் அழித்தார்கள். ஆனால், எஞ்சிய நினைவுகளை இன்று நாமே அழிக்கிறோம்.

கட்சி வேறுபாடுகள் தாண்டிப் பேரினவாதிகள் ஒன்றுபட்டு நினைவேந்தியவர்களைக் கைது செய்யுமாறு கொக்கரிக்கிறார்கள். ஆனால், நாமோ பொதுநினைவேந்தல்களிற்கூட ஒன்றுபட முடியாமல் தமிழ்த்தேசியத்தை மழுங்கடித்து வருகிறோம் - என்றார். (ச-27)

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இடமாற்றம்

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் 23 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் வெவ்வேறு பொலிஸ் நிலையங்களில் வேறு கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார். பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-இ)

# மன்னாரில் கஞ்சா மீட்பு!

மன்னார், செப். 30

தமிழகத்திலிருந்து கடத்திக் கொண்டு வரப்பட்டது என்று சந்தேகிக்கப்படும் 160 கிலோ கேரளக் கஞ்சா மன்னாரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை மீட்கப்பட் டது.

தலைமன்னார் பகுதியில் பட்டா ரக வாகனத்தில் கடத்திச் செல்வதாக தலைமன்னார் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கஞ்சா மீட்கப்பட் டது.

அத்துடன், கஞ்சாவைக் கடத்திய குற்றச்சாட்டில் பட்டா ரக வாகன சாரதியும் கைதுசெய்யப்பட்டார். மீட்கப்பட்ட கஞ்சாவையும் கைது செய்யப்பட்ட சந்தேகநபரான வாகன சாரதியையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-14,20)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 04 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும். இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **0772880152**

**பணியாளர்கள் தேவை**

**யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார** நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண்/பெண். முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்** : (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர்:** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

சுயவிபரக் கோவையுடன் திங்கள் முதல் சனிக்கிழமை வரை மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 4.00 மணிவரை நேரில்வரவும்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 224 5511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நாடகமே தேசியபேரவை!

## சாடுகின்றது ஜே.வி.பி.



**கொழும்பு, செப்.30**

**சர்வதேச அழுத்தங்களை சமாளிப்பதற்கான ரணில் விக்கிரமசிங்கவின் நாடகமே தேசியபேரவையாகும். அரசியல் நோக்கம் கொண்ட அந்தப் பேரவை பயனற்றதாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஒடுக்கப்படுகின்றனர். அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. மறுபுறத்தில் தனக்குத் தேவையான அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்ச்சி நிரலை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. இந்த நிலையில் தேசியபேரவை எதற்கு? பெயரளவில் மட்டுமே அது இருக்கப்போகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. தற்போதைய அரசாங்கமும் மக்களால் நிராகரிக்கட்டுள்ளது. ஊழல், மோசடிகள் இடம்பெறுகின்றன. எனவே, சர்வதேசமட்டத்தில் எழும் அழுத்தங்களை சமாளிப்பதற்காகவே ஆளுங்கட்சி தேசியபேரவையை பயன்படுத்த முயற்சிக்கின்றது-என்றார். (எ-44)

# ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகள் இரத்து!

## மேன்முறையீட்டு நீதிமன்று அதிரடி

கொழும்பு, செப். 30

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவால் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டாரவை பிரதிவாதியாக பெயர் குறிப்பிட்டு வழங்கப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் இரத்துச் செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் எழுத்தாணை பிறப்பித்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கடந்த ஜனவரி 18ஆம் திகதி அமைச்சரவை வழங்கிய அனுமதியை இரத்து செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரச அலுவலர்கள் ஏதேனும் வகையில் அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பின், அதுகுறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை சமர்ப்பிக்க ஜனாதிபதியால் குறித்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

பல்வேறு ஊழல் மோசடிகளில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

குற்றவாளிகள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது சட்டவிரோத செயல். இவ்வாறு செயற்பட்டதனூடாக வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறி ஆணைக்குழு செயற்பட்டுள்ளது.

அதனடிப்படையில் ஜனாதிபதி ஆணைக்குழுவினூடாக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாதிருக்க சட்டமா அதிபருக்கு உத்தரவிடுமாறும் கடந்த ஜனவரி 18 ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை இடைநிறுத்த உத்தரவிடுமாறு மனுதாரரால் மனுவில் கோரப்பட்டது.

அதன்பிரகாரம் ஜனாதிபதி ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளையும் இரத்து செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் எழுத்தாணை பிறப்பித்துள்ளது. (ச-இ)

# தொற்றாநோய்களால் 80 வீதமானோர் பாதிப்பு


## தொற்றாநோய்ப் பிரிவு பணிப்பாளர் தகவல்

கொழும்பு, செப். 30

நாட்டில் 80 வீதமானோர் தொற்றாநோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 34 வீதமானவர்கள் மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தொற்றாநோய்கள் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சமிந்தி சமரகோன் தெரிவித்தார்.

கழுத்தின் ஓரங்களை அழுத்துவது போல் கடுமையான வலி, கையின் மேலிருந்து கீழாக ஏற்படும் வலி, வயிற்றில் கடுமையான வலி, தோள்களில் வலி என்பன மாரடைப்பின் அறிகுறிகளாகும்.

அத்தகைய அறிகுறிகள் ஏற்பட்டு ஒரு மணி நேரத்துக்குள் மருத்துவமனைக்கு செல்வது கட்டாயமாகும். மேலும் சிகிச்சை பெறுவதில் தாமதம் ஏற்பட்டால் அது இதயத்தின் பாதிப்பை அதிகரிக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற நவராத்திரி விழாவில், பிரதம அதிதியாக அவரது நெருங்கிய நண்பரான சுப்பிரமணியன் சுவாமி கலந்து கொண்டார். விழாவில் கலந்துகொள்வதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவையும் சுப்பிரமணியன் சுவாமி சந்தித்தார். (எ-14-இ)




# நெருக்கடிக்கு பெரமுன மட்டும் பொறுப்பில்லை

## சாகர காரியவசம் எடுத்துரைப்பு

கொழும்பு, செப். 30

பொருளாதார நெருக்கடிக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன மாத்திரம் பொறுப்புக்கூற வேண்டும் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதுவரை ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொறுப்புக் கூறவேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கான இறுதித் தீர்வல்ல. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண உரிய திட்டங்களை செயற்படுத்தினோம்.

இருப்பினும், பல்வேறு காரணிகளால் திட்டங்களை வெற்றிபெறச் செய்ய முடியவில்லை.

தேசிய உற்பத்திகள் மற்றும் தொழில்துறையை மேம்படுத்தினால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வுகாண முடியும். தேசிய தொழில் துறையை வெகுவிரைவில் மேம்படுத்துவோம்.

அரசாங்கம் மாற்றமடையும்போது பொருளாதார கொள்கைகள் மாற்றமடையாமலிருக்க ... ளில் சட்ட ரீதியில் ... படும் - என்றார். (எ-14.இ)

# அரசு வாக்குறுதியை மீறியதால் தேசியபேரவை புறக்கணிப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, செப்.30

மக்கள் எழுச்சி ஏற்பட்டபோது வழங்கிய வாக்குறுதிகளை மறந்து அரசாங்கம் செயற்படுகின்றது. பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவதைவிடுத்து, அரசியல் நடத்தப்படுகின்றது. எனவே, தேசிய பேரவையைப் புறக்கணிக்கும் முடிவையே எமது கட்சி பெரும்பாலும் எடுக்கும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரும், எதிரணி பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குறுகிய காலத்துக்கு அரசாங்கமொன்று நிறுவப்படவேண்டும், அமைச்சரவை மட்டுப்படுத்தப்படவேண்டும், பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும், குறுகிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பன உட்பட முக்கியமான பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இவற்றில் ஒரு அங்கமே தேசிய பேரவையாகும்.



தேசியபேரவை அமைப்பதற்கே 3 மாதங்கள் எடுத்துள்ளன. அதற்கிடையில் ஆளுங்கட்சி அரசியலும் நடத்திவருகின்றது. அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர், இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். போராட்ட காலத்தில் இருந்த அக்கறை தற்போது அரசாங்கத்திடம் இல்லை. எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டன என அது கருதுகின்றது. முக்கியமாக கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப்பதவி எதிரணிகளுக்கு வழங்கப்படும் என சபாநாயகர் உறுதியளித்தார். தற்போது முடியாது என்கிறார். தேசியபேரவை குறித்தும், எமக்கு ஐயப்பாடு உள்ளது. அதைப் புறக்கணிக்கும்முடிவையேகட்சிபெரும்பாலும் எடுக்கும் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நினைவுத்தூபிக்கு ஆபத்து !

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு உரிமை கோரும் சர்ச்சைகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. இனிமேல் அனைத்து நினைவேந்தல்களிலும் இவ்வாறான குடுமிப்பிடிச் சண்டை இருக்கப்போகின்றது என்பதைத்தான் இந்தச் சர்ச்சைகள் எதிர்வுகூறுகின்றன. அரசியல் கட்சிகளின் இந்த நினைவேந்தலுக்கான மோதல் ஒருபுறம் தொடர்ந்து கொண்டிருக்க, மறுபுறம் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு ஆபத்து வந்திருக்கின்றது. ஆனால், அது தொடர்பில் எந்தவொரு அரசியல்வாதியும் வாய் திறக்கவில்லை. தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு 2018ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் காலத்தில், பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் பாதுகாப்புவேலி அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு –செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கு அமைவாக பாதுகாப்பு வேலியும் அமைக்கப்பட்டது. அந்த ஆண்டு நினைவேந்தலுக்கு தடை கோரி யாழ்ப்பாணப் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கின் கட்டளையில், அரச நிதியில் தூபிக்கு பாதுகாப்புவேலி அமைக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டி நினைவேந்தலுக்கு தடை விதிக்க முடியாது என்று கூறப்பட்டிருந்தது.

இது சிறிலங்கா பொலிஸுக்கும், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் பெரும் புகைச்சலை கிளப்பியிருந்தது. பொலிஸார் ஏனைய நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்கக் கோரும்போது மேற்படி நீதிமன்றக் கட்டளையைச் சுட்டிக்காட்டி தடைநீக்கத்தைத் தமிழர் தரப்புக்கள் கோரப்போகின்றன என்பதுவே இந்தப் புகைச்சலுக்கு – எரிச்சலுக்கு –பிரதான காரணம். பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்படும் நிதி பொதுத்தேவைக்கே பயன்படுத்தமுடியும் என்ற அடிப்படையில், எவ்வாறு தூபிக்கு பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு ஒதுக்க அனுமதிக்கப்பட்டது என்ற கேள்வியை முன்னிறுத்தியும், பயங்கரவாத அமைப்பு ஒன்றின் – தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் உறுப்பினருக்கான நினைவுத் தூபிக்கு எவ்வாறு அரசாங்க நிதியை ஒதுக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், பொதுமக்கள், தமக்காக அஹிம்சை வழியில் போராடி உயிர்நீத்த ஒருவரை நினைவேந்துவதற்கு தடையேதுமில்லை. அதேபோன்று பொதுமக்களின் கூட்டுக்கோரிக்கைக்கு செவிசாய்த்து, தூபியை அமைத்தல், பாதுகாப்பு வேலியிடுதல் என்பவற்றை நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டத்தின் பிரகாரமே– உரிய அமைச்சுகளின் அனுமதியைப் பெற்றே– மேற்கொண்டிருப்பார்கள். ஆகவே, நீதியான விசாரணை நடத்தப்பட்டால், தியாகி திலீபனின் நினைவுத்தூபியையோ, அதற்கான பாதுகாப்பு வேலியையோ அரச படைகளால் தொடக்கூட முடியாது. ஆனால் , ஒரு முற்கற்பிதத்தோடு – முன்னரே என்ன செய்யவேண்டுமெனத் தீர்மானித்து விட்டு– அதற்கேற்றவகையில் விசாரணையின் திசையைக்கொண்டு செல்வதே அதிகாரத்தரப்பினரின் இயல்பாக இருக்கின்றது. அதனால், முழுக்க இனவாதச் சிந்தனையுடன், தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலி மற்றும் தூபியை அகற்றுவதற்கான எத்தனத்துடன் புலன் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விசாரணைகளால், கடந்த காலங்களில் இந்தத் தூபி அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அனுமதித்த அரசாங்க உயர் அதிகாரிகளும் பாதிப்பை எதிர்கொள்ளும் அபாயம் காணப்படுகின்றது.


இது நிர்வாக விடயம் என்பதைத்தாண்டி ஓர் உணர்வுபூர்வமான விடயம். அந்தக் கோணத்தில் புலன் விசாரணையாளர்கள் சிந்திக்க மாட்டார்கள். அவர்கள் தமது விசாரணை அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முன்னகர்த்தும்போது அரசியல்வாதிகளைவிடவும், அதிகாரிகளே சிக்கிக் கொள்ளும் பெரும் ஆபத்து காத்திருக்கின்றது.

ஆனாலும் தியாகி திலீபனின் நினைவிடத்துக்கு வேலி அமைப்பதற்கான அனுமதியை நல்லாட்சிக் காலத்தில் பிரதமராக இருந்த இப்போதைய ஜனாதிபதி ரணிலின் அமைச்சே வழங்கியிருந்தது. இப்போது சர்வவல்லமையும் பொருந்திய ஜனாதிபதியாக இருக்கும் ரணில் நினைத்தால், நினைவுத்தூபி தொடர்பான புலனாய்வுத்துருவல்களை ஒரே உத்தரவில் இல்லாதாக்கமுடியும். அதற்கு முதலில் எமது அரசியல்வாதிகள் இந்த விடயம் தொடர்பில் வாய் திறந்து குரல் கொடுக்கவேண்டும். நினைவேந்தலை நடத்துவது யார் என்று எங்கள் அரசியல்வாதிகள் சண்டை பிடித்துக் கொண்டிருக்கையில், அடுத்த ஆண்டு நினைவேந்தல் நடத்துவதற்கு தூபியையே இல்லாதாக்கும் முயற்சியில் பேரினவாதம் இறங்கியிருக்கிறது. உள்வீட்டுச் சண்டைகளை மூடை கட்டி வைத்துவிட்டு, தூபியைக் காப்பதற்கும், இப்போது நடைபெறும் புலன்விசாரணையை நிறுத்துவதற்கும் எந்தவகையான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பது பற்றி தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்கவேண்டும், சிந்திப்பார்களா?

### நாளொரு நல்வார்த்தை

" கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்."

- அப்துல் கலாம்




# போர்க் குற்ற விசாரணைக்கு அமெ. ஒத்துழைக்க வேண்டும்

## காங்கிரஸ் உறுப்பினர்கள் வேண்டுகோள்

**கொழும்பு, செப்.30**

**இலங்கையின் உள்நாட்டு மோதலின் போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றம்சாட்டப்படும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அவரது குடும்பத்தினர் உட்பட அனைவரையும் விசாரணை செய்து பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கென் ஆதரவளிக்க வேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் ராஜா கிருஸ்ணமூர்த்தி ஹாங்ஜோன்சன் உட்பட 8 காங்கிரஸ் உறுப்பினர்கள் அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்

குற்றவாளிகளை பொறுப்புக்கூறச்செய்தல் இலங்கையின் உள்நாட்டுப் போரில் மனித குலத்துக்கு எதிரான குற்றம், போர்க் குற்றங்கள் ஆகியவற்றுக்காக சர்வதேச நீதி பொறிமுறையை உருவாக்குவது தொடர்பாக அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் விளங்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் துஸ்பிரயோகங்களுக்கு காரணமானவர்கள் என குற்றம்சாட்டப்படுபவர்களை பொறுப்புக் கூறச்செய்வதற்கு தடைகள் உட்பட இராஜதந்திர சாதனங்களை பயன்படுத்தவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தசாப்த காலப் போரின் போது மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் பரிகாரம் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் மட்டுமே இலங்கை தற்போதைய பொருளாதார அரசியல் நெருக்கடிக்கு முழுமையான தீர்வைக் காணமுடியும் என்று அவர்கள் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

# 22ஆவது திருத்தம் தொடர்பில் 6,7 ஆம் திகதிகளில் விவாதம்

கொழும்பு, செப்.30

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவின் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அவரின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இதன்போதே 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை மேற்படி நாட்களில் விவாதத்துக்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாதத்துக்கான முதல்வார நாடாளுமன்ற அமர்வு 3 ஆம் திகதி ஆரம்பமாகி, 7 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. (எ-44)

**நாளை** 01.10.2022 சனிக்கிழமை புரட்டாதி - 14

சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம்: 09.02 - 10.32

ஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தின் உதவி நெருக்கடிகளுக்கு தீர்வல்ல

## விமல் வீரவன்ஸ கூறுகின்றார்



**கொழும்பு, செப்.30**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி என்ற நோய்க்கு சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்படும் மருந்து தீர்வாக அமையாது. மாறாக அது நோயை தீவிரப்படுத்தும். அதன்மூலம் சமூக நெருக்கடி உச்சம் பெறும் என்று 'உத்தர லங்கா சபாகய' என்ற கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சர்வதேச நாணய நிதியமானது, அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையின் ஓர் அங்கமாகும். எனவே, 'பொருளாதார நெருக்கடி' என்ற பிரச்சினைக்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதால் தீர்வு கிட்டாது, நோயை குணப்படுத்துவதற்கு அல்ல, மாறாக நோயைத் தக்க வைத்துக் கொள்ளவே அங்கிருந்து மருந்து வழங்கப்படும். எனவே, சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் மீண்டெழலாம் என நினைப்பது தவறு. அதன்மூலம் சமூக நெருக்கடி மேலும் அதிகரிக்கும் என்பதே உண்மை.

நாடுவதால் பொருளாதார நெருக்கடி தீர்ந்து, சமூக பாதுகாப்பு ஏற்படாது. அது எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும். அதனால்தான் 2 ஆம் கட்ட போராட்டம் ஆரம்பமாகும் என அநுரகுமார திஸாநாயக்க போன்றவர்கள் அறிவித்து வருகின்றனர்' - என்றார். (ம-44)

# கடந்த கால ஊழல் மோசடிகளே வங்குரோத்து நிலைக்கு காரணம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 30

ஆட்சியாளர்கள் சிலரின் ஊழல் மோசடிச் செயற்பாடுகளே தற்போது நாடு முழுமையாக வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதற்கான பிரதான காரணம் என்று முன்னாள் ஜனாதிபதியும் தெற்காசிய கொள்கை மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனத்தின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்காசிய கொள்கை மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனமானது நெதர்லாந்து தூதரகத்தின் அனுசரணையுடன் 'பெண் கவுன்சிலர்கள் மூலம் நல்லிணக்கம்' என்ற செயற்றிட்டத்தை கடந்த 2021 ஒக்ரோபர் மாதம் ஆரம்பித்தது.

அந்தச் செயற்திட்டத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

பெண்கள் வலுவூட்டலை இலக்காகக்கொண்டு கடந்த காலங்களிலிருந்து முன்னெடுக்கப்பட்டுவரும் பெரும்பாலான செயற்றிட்டங்களுக்கு நெதர்லாந்து அரசாங்கம் தொடர்ச்சியாக ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. பெண் உறுப்பினர்களுக்கு உரியவாறான முகாமைத்துவம் சார்ந்த பயிற்சிகளை வழங்கவேண்டிய பொறுப்பு அந்தந்த அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்றது.

அத்துடன், தற்போது நாடு பொருளாதார ரீதியில் முழுமையாக வங்குரோத்து நிலையை அடைந்திருக்கின்றது. இதற்கு சில ஆட்சியாளர்களின் ஊழல் மோசடிகள் மாத்திரமே பிரதான காரணமாகும். எனவே, நாட்டின் வளங்களைக் கொள்ளையடிப்பதன் மூலம் இதற்குத் தீர்வுகாண முடியாது - என்றார். (எ-14,இ)

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, செப். 30

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை நேற்றுமுன்தினம் சற்று அதிகரித்தது. கடந்த செவ்வாய்க்கிழமை 86 அமெரிக்க டொலராகக் காணப்பட்ட மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 88 அமெரிக்க டொலராகக் காணப்பட்டது.

இதேவேளை பிரான்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86 முதல் 89 அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. (எ-14இ)

# புதிய துறைகளில் பிரான்ஸ் முதலீடு

## தினேஷ் குணவர்த்தன நம்பிக்கை



மீன்பிடி, விவசாயம், தகவல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, இலத்திரனியல் மற்றும் சுற்றுலாத்துறைகள் போன்ற புதிய முதலீட்டுத் துறைகளில் பிரான்ஸ் முதலீட்டாளர்கள் பிரவேசிப்பார்கள் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பிரான்ஸ் தூதுவரின் பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகியவற்றில் பரந்த ஆற்றலைக் கொண்டுள்ளது. உலகப் பொருளாதார நிலைமை தற்போது கடினமான கட்டத்தை அடைந்தவுடன் பிரான்ஸ் மேலும் பல திட்டங்களை மேற்கொள்ளும். மீன்வள அபிவிருத்திக்கு தேவை இருப்பதால் அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும் திறன் உள்ளது - என்றார். (எ-14,இ)

# ரோஹிதவின் பயணத்தடை தற்காலிகமாக நீக்கம்

கொழும்பு, செப். 30

முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தனவின் பயணத்தடை கோட்டை நீதிமன்றத்தால் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

ரோஹித அபேகுணவர்த்தன சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ, முன்னாள் அமைச்சர் ரோஹிதவின் புதல்வனின் வெளிநாட்டுக் கல்வி நடவடிக்கைகளுக்காக இங்கிலாந்து செல்லவும், வர்த்தகம் நிமித்தமாக இத்தாலி செல்லவும் அனுமதிக்க வேண்டும் என்று மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

மனுவைப் பரிசீலித்த நீதவான், 10 லட்சம் ரூபா சரீரப் பிணையில் அவரைத் தற்காலிகமாக விடுவிக்க அனுமதித்தார். அதற்கமைய ஒக்ரோபர் 10 ஆம் திகதி முதல் நவம்பர் 20 ஆம் திகதி வரை வெளிநாட்டுப் பயணத்துக்கான தடை நீக்கப்பட்டது. அத்துடன் அவரின் பயணத்தடை நீக்கத்தை குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கவேண்டும் என்று பதிவாளருக்கு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-14,இ)

# உயர் பாதுகாப்பு வலயங்களால் நாடு, மக்களுக்கு பாதிப்பில்லை

## ஐ.தே.க. அமைப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 30

மக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டு வளங்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதன்மூலம் பொதுமக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அத்துடன் உயர் பாதுகாப்பு வலய பிரகடனம் மூலம் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுமாக இருந்தால் அது தொடர்பில் மீள் பரிசீலனை செய்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மகரகம தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி சுகத் ஜயசுந்தர தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் என்ற வகையில் நாட்டை நிர்வகிப்பதுடன், மக்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் அவதானம் செலுத்த வேண்டியது அதன் பொறுப்பாகும். அதன் பிரகாரம் மக்களின் பாதுகாப்பு மற்றும் அரச வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டே உயர் பாதுகாப்பு வலயங்கள் என சில முக்கியமான இடங்கள் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

என்றாலும் உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இடங்களுக்கு அருகில் வாகனங்கள் நிறுத்துவது, மக்கள் நடமாடுவது, அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வது போன்ற விடயங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்க வேண்டும். அது மக்களினதும் நாட்டினதும் பாதுகாப்புக்கு அவசியமாகும். என்றாலும் தற்போது பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டு வரும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து வர்த்தமானி அறிவிப்பை மீள் பரிசீலனை செய்வது சம்பந்தமாக ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். என்றார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீண்டநாள் முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதிக்குள் ஏற்பட்ட பிரச்சினை விலகும். ஒருவரை ஒருவர் புரிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்:** சொத்து விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்சினை இன்று முடிவுக்கு வரும். குழந்தை பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த வருவாய் வரும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட சிக்கல் தீரும். பணியாளர் ஆதரவுடன் வியாபாரத்தை விருத்தி செய்வீர்கள். வருமானம் கூடும். முயற்சியில் தடை விலகும்.

**கடகம்:** முயற்சியில் சில தடைகள் ஏற்படும். சட்ட சிக்கல்களை சந்திக்க நேரிடலாம். குரு அருளால் சிந்தித்து செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** துணிச்சலுடன் செயற்பட்டு லாபம் காண்பீர்கள். எண்ணம் நிறைவேறும். மற்றவரின் விமர்சனத்தை ஒதுக்கி வைத்து செயற்படுவீர்கள். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த தகவல் வரும். வங்கியில் விண்ணப்பித்த கடன் வந்து சேரும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். எண்ணம் நிறைவேறும்.

**துலாம்:** உங்கள் கவனக்குறைவால் முயற்சி நிறைவேறாமல் போகும். நிதானம் தேவை. செயல்களில் தடுமாற்றம் அடைவீர்கள். எதிர்பார்த்த ஒன்றில் தாமதம் ஏற்படும். செல்வாக்கு உயரும்.

**விருச்சிகம்:** வரவு அதிகரிக்கும் என்றாலும் திடீர் செலவால் சங்கடம் அடைவீர்கள். உழைப்பின் வழியே உங்கள் செயல்களில் சாதக நிலை காண்பீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணம் வரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**மகரம்:** வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு எதிர்பார்த்த வாய்ப்பு தேடி வரும். தொழிலை விரிவு செய்வதற்காக எதிர்பார்த்த தொகை கைக்கு வந்து சேரும். எதிர்பார்த்ததை அடைவீர்கள்.

**கும்பம்:** முயற்சி ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சியான நிலை ஏற்படும். செயலில் சிரமம் ஏற்பட்டாலும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வரவு கூடும். வரவேண்டிய பணம் இன்று வந்து சேரும்.

**மீனம்:** புதிய முயற்சி இன்று வேண்டாம். செயல்கள் தாமதமாகும். எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கவனம் தேவை.

# தொடுகை தொடர்பான விளக்கம் துஷ்பிரயோகங்களை குறைக்கும்

## சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆலோசனை

**சாவகச்சேரி, செப் 30**

**சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்க அவர்களுக்குப் பிறரால் மேற்கொள்ளும் தொடுகைகளில் நல்ல தொடுகை, கெட்ட தொடுகை எதுவென இனங்காண அறிவூட்டுவதோடு கெட்ட தொடுகைக்கான சந்தர்ப்பம் ஏற்படும்போது அவ்வாறு செய்ய வேண்டாமென பதிலளிக்க பழக்கவேண்டும். அதுதொடர்பாகப் பெற்றோர், ஆசிரியர்களுக்கு முறையிடவும் அறிவூட்ட வேண்டும் என்று சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.**

பெற்றோருக்கான சுகாதார மேம்பாட்டு செயற்றிட்டக் கருத்தரங்கு மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிள்ளைகளின் நடத்தை மாற்றங்களை விளங்கிக்கொள்ள அவர்களுடன் பெற்றோர் நேரம் செலவிடுவதோடு மனம்விட்டு உரையாடவும் வேண்டும்.

இலத்திரனியல் ஊடகங்களை அளவாகவும் பெற்றோர் கண்காணிப்புடனும் பயன்படுத்த அனுமதிப்பதோடு அவர்களது நண்பர்கள் குறித்தும் விழிப்புடன் இருப்பதன் மூலம் அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு உட்படாது தவிர்க்க முடியும்.

வளர் இளம்பருவப் பிள்ளைகளின் இனவிருத்தி, சுகாதாரம் குறித்து பிள்ளைகளுக்கு பெற்றோர் அறிவூட்டவேண்டும். அத்துடன், அவர்களுக்கான உணவை தமது பிரதேச வளங்களிலிருந்து தெரிவுசெய்து வழங்குவது முக்கியமானதாகும். கடைகளில் வாங்கும் பொதி செய்யப்பட்ட மற்றும் தயாரிக்கப்பட்ட வெளி உணவுகளைத் தவிர்த்து பிரதேச விளைபொருள்களிலிருந்து செய்யக்கூடிய உள்ளூர் உணவுப் பொருள்களை பாடசாலை மதிய உணவுக்காக கொடுத்துவிடுதல் மிகவும் சிறப்பானது - என்றார்.

(எ-14,9)

## துயர்பகிர்வு

எமது இசையாசிரியர்கழக அங்கத்துவ ஆசிரியர்
செல்வி வெங்கடேஸ்வரஐயர் விஜயபாரதி அவர்களின் அன்புத் தந்தை


**சுந்தரேஸ்வரஐயர் வெங்கடேஸ்வரக் குருக்கள்**

அவர்கள் 26.09.2022 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். *ஓம் சாந்தி!*

**யாழ். கல்வி வலய இசையாசிரியர் கழகம்.**

## மரண அறிவித்தல்

மண் மகிழ
16 . 11 . 1947



கண் நெகிழ
27 . 09 . 2022

### திரு. சிவானந்தன் சிவநேசன்

(ஓய்வு நிலை லிகிதர் - இறைவரித் திணைக்களம் யாழ்ப்பாணம், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு, தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், மாவடி ஆலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சிவானந்தன் சிவநேசன் கடந்த (27.09.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவானந்தன் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், பகீரதன், நிறோசினி (ஆசிரியை - யுப்பிற்றர் முன்பள்ளி - சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார் (பாதுகாப்பு உத்தியோகத்தர் - மேக்கன்ரைஸ் - HNB வங்கி - சங்கானை), லயந்தினி (ஆசிரியை - யா/ அராலி சரஸ்வதி ம.வி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர் களான சிவபாதம், சிவனடி மற்றும் பத்மாவதி, புவனேஸ்வரி, திகலகவதி, மகேஸ்வரி, யோகேஸ்வரன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, சிவபாதசுந்தரம் மற்றும் சச்சிதானந்தம், தியாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோபிதா, பிரணவி, மிதுலிகா, மிதுசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (28.09.2022) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை[illegible]

**மாவடி ஆலய வீதி, சங்கானை,**
**076 021 9529**
**077 534 9103**
**தகவல்: குடும்பத்தினர்**





## அந்தியேட்டி அழைப்பும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
23.02.1943

மறைவு
12.09.2022

கடந்த 12.09.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகமுத்து குமாரசாமி (பொன்னர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.09.2022) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**காளிகோவிலடி மல்லாகம்.**
**(மில்லேன் மல்லாகம்) 076 654 5220**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை

கொமர்ஷல் பாங் ஒவ் சிலோன் (PLC)
பதிவு இல:PQ(116)
21, சேர்றசீக் பறீட் மாவத்தை.
கொழும்பு - 01.
கிளை இல-30.
பிரதான வீதி.
நெல்லியடி.

வழக்காளி

வழ. இல : MB/18908/15
வகை : ஈட்டுமுறி
பெறுமதி: ரூ. 4, 096,667. 35

எதிர்

1. கதிர்காமத்தம்பி கஜமுகன்
2. பெண் விஜயநிர்மலா

இருவரும்
கொழுவந்தோட்டம்.
அல்வாய் - வடமேற்கு.
அல்வாய்.

எதிராளிகளி

2020 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய திருமதி ஆ.நந்தினிதேவி ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட இவ்விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த அல்வாய் கிராமத்திலுள்ள "ஆரியன்தோட்டம்" நிலப்பரப்பு 02 குளி 08.41 மற்றும் நிலப்பரப்பு 04 குளி 05 ஆதனங்களில் நின்று 2022 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 02 ஆந் திகதி மு.ப 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

### தீர்வைத்தொகை

2015ம் ஆண்டு சித்திரை மாதம் 09 ஆம் திகதியிலுள்ளவாறு நிலுவையாக வுள்ள முதலும் 17% வட்டியுமாகச் சேர்த்து மொத்தம் ரூபா 4, 096, 667. 35மும் பின்னர் 2015.04.09 ஆம் திகதி தொடக்கம் முழுத்தீர்வைத் தொகைக்கும் முழுவதும் இறுக்கும்வரை சட்ட வட்டியும் செலவும் செலுத்த வேண்டும்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மழவராய குறிச்சி இறை:

"ஆரியன்தோட்டம்" நிலப்பரப்பு 19 1/8 வீடு 1 கூடிய நிலப்பரப்பு 20 குளி 8 1/4 இதில் கிழக்குப் புறமாக நிலப்பரப்பு 03 குளி 07 நீக்கி மிகுதிக்கு நிலப்பரப்பு 17 குளி 1 1/4 இதில் மேற்குப் புறமாக

நிலப்பரப்பு 08 குளி 8 1/4 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. மகாலிங்கம் அவர்களால் 2011.11.22ஆம் திகதி 0028ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் 1ஆம். 2ஆம் துண்டுகளாக காட்டப்பட்டபடிக்கு கூடிய விசாலம் நிலப்பரப்பு 06 குளி 13. 41 இதில்

1. மேற்குறித்த 0028ஆம் இலக்க" வரைபடத்தில் 1ஆம் துண்டுக்கு நிலப்பரப்பு 02 குளி 08. 41 இதற்கெல்லை கிழக்கு கதிரவேல் தவனேஸ்வரனினாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு கட்டைவேலிப் பிரதேசசபைக்குரிய பொதுச்சந்தை. தெற்கு குறித்த படத்தில் 2ஆம் துண்டாகிய பின் கூறப்படும் 2ஆம் ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பயிர்வகைகளும் மற்றும் அடங்கலும்.
2. மேற்படி இறை:

   மேற்குறித்த 0028ஆம் இலக்க வரைபடத்தில் 2ஆம் துண்டுக்கு நிலப்பரப்பு 04 குளி 05 இதற்கெல்லை கிழக்கு கதிரவேல் தவனேஸ்வரனினாதனம். வடக்கு குறித்த படத்தில் 1ம் துண்டாகிய மேற்குறித்த 1 ஆம் ஆதனம். மேற்கு கட்டைவேலிப் பிரதேசசபைக்குரிய பொதுச்சந்தை. தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் வீடு மற்றுமடங்கலும்.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (1/4) உடன் அவ் விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிக மாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) 1%
பிஸ்கால். எழுதுனர். கூவுநர் செலவு சிவில் நடைமுறைக் கோவையின்படி
விளம்பரச் செலவுகளும். பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்துச் செலவுகள்
விற்பனை கமிசன் சிவில் நடை முறைக்கோவையின் படி
விற்பனை ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)

**நீதிமன்றக் கட்டளைப்படி**

**2022 ஆம் ஆண்டு**
**புரட்டாதி மாதம் 27ஆம் திகதி**

**பதிவாளர் / பிஸ்கால்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**பருத்தித்துறை.**

(cs.21014) (2.6)

# யா/ வட்டு இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்ட அழைப்பு

- இடம் : பாடசாலையின் பிரதான மண்டபம்
- காலம் : 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : முற்பகல் 10.00 மணி

புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வே.சிவலிங்கம்**
**செயலாளர்.**

(cr.38151) (2.6)

# மு/மல்லாவி மத்திய கல்லூரி
## பழைய மாணவ (தாய்ச்) சங்க
# பொதுக்கூட்டம்

மு/ மல்லாவி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் தாய்ச் சங்க பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகக் குழுத்தெரிவும், கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக உத்தியோக பூர்வமாக முதற்தடவையாக நடைபெறவுள்ளது. இக் கூட்டத் திற்கு அனைத்துப் பழைய மாணவர்களும் தவறாது வருகை தருமாறு கோட்டுக்கொள்கிறோம்.

- **காலம் : 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் : முற்பகல் 10.00 மணி**
- **இடம் : கல்லூரி மண்டபம்**

**அதிபர்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**
**(தேசிய பாடசாலை)**

(cs.21013) (2.6)

# 15 சாராயப் போத்தல்கள் வைத்திருந்தவர் கைது!

யாழ்.- குறிகாட்டுவான் பேருந்தில் 15 சாராயப் போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை மதுவரித் திணைக் களத் தினர் கைதுசெய்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், மதுவரித் திணைக் களத்தினர் குறித்த நபரை சோதனையிட்டனர். இதன்போது 15 சாராயப் போத்தல்கள் கைப்பற் றப்பட்டதுடன் அதை உடைமையில் வைத்தி ருந்தவரையும் கைதுசெய்தனர். அனலைதீவைச் சேர்ந்த 49 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த மதுவரித் திணைக்களத்தினர் நடவ டிக்கை எடுத்துள்ளனர். (ச-27)

# தவறிவிட்டது

வரணியில் இருந்து யாழ்நகர் பகுதிக்கு பிரயாணத்தின் போது சதாசிவம் ஜெயச்சந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (47 0805536 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

## 077 891 0342

# HIACE VAN விற்பனைக்கு

உற்பத்தி - 1997 முதல் பதிவு - 2003
3L - Engine, Auto gear,
NP HK xxxx 5 Door, - Short Model.

## 077 392 7955

# கேள்வி அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

01. தலைவர். பிராந்திய பெறுகைக்குழு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கிளிநொச்சி அவர்கள். கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவ ருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
02. விலைக்கேள்வியானது தேசியபோட்டி கேள்வியின் (NCB) மூலம் நடாத்தப்படும்.
03. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
04. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கண்டி வீதி. கிளிநொச்சி. (தொலைபேசி இல 021 228 5932/ 021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன். இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
05. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கண்டி வீதி. கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 30.09.2022 ம் திகதி முதல் 13.10.2022 ம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
06. 05.10.2022ம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
07. கேள்விகள் யாவும் 14.10.2022ந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடிய தாக தலைவர். கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின். கண்டி வீதி. கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 14.10.2022 ந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.
08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
09. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக் கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million without VAT | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/KOC/RDHS/PSSP/ Laptop/2022 | Procurement of Laptop | 03 | 2,500.00 | 50,000.00 | 25.12.2022 |
| 02 | NP/KOC/RDHS /Lin.Min/Air.con/2022 | Supply of Air Conditioner -RMSD Kilinochchi | 05 | 2,500.00 | 79,000.00 | 25.12.2022 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

TP- 021 228 5719, Fax- 021 228 5931
E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com

(cr.37597(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுகியநோக்கம் கொண்ட கட்சிகளுடன் இணையோம்

## பெரமுன அறிவிப்பு

**கொழும்பு, செப். 30**

**குறுகிய அரசியல் நோக்கங்களை அடைவதற்காக செயற்படும் கட்சிகளுடன் இனிமேல் கூட்டணி வைத்துக்கொள்ளப்படமாட்டோம் - என்று ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.**

பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இந்த அறிவிப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'அரசாங்கம் மாறினாலும் தேசியக் கொள்கையென்பது மாறக் கூடாது. ஆனால், எமது நாட்டில் அந்த கொள்கை மாறுவதே நெருக்கடி நிலைமைக்கு ஒரு காரணமாகும். எமது திட்டங்களை குழப்பியடித்தவர்கள் இன்று வெளியேறிவிட்டனர்.

எனவே, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதை மட்டுமே இலக்காகக் கொண்டும், நாடாளுமன்ற ஆசன இருப்புக்காகவும் கூட்டணி வைத்துக்கொள்ள முன்வரும் கட்சிகளும் எமது அணியில் இனி இடமில்லை. நாட்டின் எதிர்காலம் கருதி, எமது கொள்கைகளை ஏற்கக்கூடியவர்கள் இணையலாம்' - என்றார். (ம-44)

# ஜனாதிபதி மாளிகை சேதம்; சந்தேகநபர்கள் மூவர் கைது!



கொழும்பு, செப். 30

கடந்த மேமாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையில் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து, உடைமைகளுக்கு சேதம் விளைவித்த குற்றச் சாட்டில் சந்தேகநபர்கள் மூவர் கொழும்புமத்திய பிரிவு குற்ற விசாரணைப் பிரிவால் நேற்று கைது செய்யப்பட்டனர். (ஒ-14-இ)

# கைதடி - தச்சன்தோப்பு வீதியில் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு!

## மக்கள் விசனம்

சாவகச்சேரி, செப். 30

கைதடி - தச்சன்தோப்பு வீதியின் இருமருங்கிலும் கழிவுகள் கொட்டப்படுவதால் எதிர்வரும் மழைகாலத்தில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கைதடி - தச்சன்தோப்பு வீதியை தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த மாணவர்கள், அரச அலுவலர்கள் உள்ளிட்ட அதிகளவான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த வீதியின் இருமருங்கிலும் வயல்வெளி காணப்படுவதால் சனநடமாட்டமற்றவேளையில் முதியோர்கள், சிறுவர்களுக்குப் பயன்படுத்தும் கழிவு 'பம்பர்ஸை' இனந்தெரியாதோர் வீசிவிட்டுச் செல்கின்றனர்.

இதனால் தினமும் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் துர்நாற்றத்தின் மத்திலேயே பயணிக்கின்றனர். ஆகவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி இவ்வாறான சுகாதாரச் சீர்கேட்டைத் தடுக்க வேண்டுமென அந்தப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (ச-9)

# நலனோம்பு நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப் 30

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழைப் பிரதேச முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில், மூத்த பிரஜைகள் நலனோம்பு நிலையத் திறப்பு விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மல்லாகம் நீதிமன்ற முன் ஒழுங்கையில் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-14)

# சாவ. நகரசபை முன்மாதிரி

# போஷாக்கு மா தயாரிப்புக்கு பெண் உறுப்பினர்களது நிதி

சாவகச்சேரி, செப். 30

சாவகச்சேரி நகரசபை பெண் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பொருண்மியம் நலிவடைந்த பெண்தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இணைந்து கூட்டுத் தொழில் முயற்சியாக போஷாக்கு மா உற்பத்தியை ஆரம்பிக்க கடந்த சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவன அனுசரணையில் உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டத்துக்கு சாவகச்சேரி நகரசபை பெண் உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்பட்டது. நகரசபையிலுள்ள நான்கு பெண் உறுப்பினர்களுக்கும் ஆறு லட்சம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டது.

இந்த நிதியை பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இணைந்து கூட்டுத் தொழில் முயற்சியாக போஷாக்கு மா உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த கூட்டுத் தொழில் முயற்சிக்கான உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் உற்பத்திக்கான தானிய வகைகள் கொள்வனவு செய்து வழங்கப்படவுள்ளன - எனத் தெரிவித்தார். (ச-9)

# போதையில் சாரத்தியம் 183 பேர் சமூகப்பணியில்

சாவகச்சேரி, செப். 30

மதுபோதையில் வாகனம் செலுத்திய 183 நபர்களை சமூகப்பணியில் ஈடுபடுத்த சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரையில் வீதிப் போக்குவரத்து பரிசோதனையில் ஈடுபட்ட வேளையில், மதுபோதையில் வாகனம் செலுத்திய நபர்களுக்கு எதிராக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்குகள் அண்மையில் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மதுபோதையில் வாகனம் செலுத்தியதை சாரதிகள் ஒப்புக்கொண்டனர். அதனையடுத்து தண்டத்துடன் சமூகப்பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவினரிடம் குறித்தநபர்களை ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது. (ஒ-14-9)

# சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், செப் 30

கோப்பாய், சரஸ்வதி முன்பள்ளியின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு முன்பள்ளி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் விருந்தினராக யாழ். வலய முறைசாரா கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ச)



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பெருநாள் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. இதன்போது பெருந்திரளானோர் சூழ புனிதரின் திருப்பவனி இடம்பெற்றது. (ச)

# எரிபொருள் விலை; 100 ரூபாவால் குறைக்கலாம்

கொழும்பு, செப். 30

பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளை லீற்றர் ஒன்றுக்கு 100 ரூபாவால் குறைக்கமுடியுமென எரிபொருள், மின்சாரம் மற்றும் துறைமுக கூட்டுத் தொழிற்சங்கங்களின் அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்பொழுது நாட்டில் நடைமுறையிலுள்ள விலைச்சூத்திரம் மற்றும் உலக சந்தை விலைகளின் அடிப்படையில் எரிபொருள் விலையை லீற்றர் ஒன்றுக்கு 100 ரூபாவால் குறைக்க முடியும்.

எனினும் வரி மற்றும் லாபங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த விலைக் குறைப்பை மேற்கொள்ள முடிந்தபோதிலும் இலங்கைப் பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம் விலைக் குறைப்பை செய்யத் தவறியுள்ளது. ஒரு லீற்றர் 95 ஒக்ரேன் ரக பெற்றோலில் 174 ரூபாவும், ஒரு லீற்றர் 92 ஒக்ரேன் ரக பெற்றோலில் 65 ரூபாவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெயில் 85 ரூபாவும் அரசாங்கம் இலாபம் ஈட்டுகின்றது - என்றார். (ஒ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவலறியும் உரிமைச் சட்டம் மக்களின் அடிப்படை உரிமை

பாடசாலை மட்ட விழிப்புணர்வு அவசியம்

ஊடகக்கற்கைநெறி துறைத்தலைவர் பேராசிரியர் ரகுராம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 30**

**வடக்கு மாகாணத்தில் தகலறியும் உரிமைச் சட்டம் தனது பணிகளை முழுமையாக பூரணப்படுத்தவில்லை. தகவலறியும் உரிமையானது ஒவ்வொரு பிரஜைகளுக்குமான அடிப்படை உரிமைகளில் ஒன்று. இந்தச் சட்டம் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் விழிப்புனர்வை ஏற்படுத்தவேண்டும் என யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைநெறி துறையின் தலைவர் பேராசிரியர் ரகுராம் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசால் பல சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. அற்றில் அநேகமானவை மக்களுக்கு நன்மை தரும் விடயங்களாக இருந்தாலும், சில சட்டங்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கு மக்களை தற்போது வரை பாதிக்கின்றன.

இந்த நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம், ஓரளவு மக்களுக்கு சாா்பாக அமைந்துள்ளது. இந்தச் சட்டம் தொடர்பான அறிவு பொதுமக்களிடம் இருக்கின்றதா? இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பலருக்கு இதுபற்றித் தெரியவில்லை.

தகவலறியும் சட்டத்தின் மூலம் அரச அலுவலர்கள் 14 நாள்களுக்குள் தகவல்களை வழங்க வேண்டியது கட்டாயம். இதற்கு அரச மட்டத்தில் ஆவணமாக தகவல்கள் சேகரிக்கப்பட்டு கணினி மயப்படுத்தப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் இணையத்தளங்கள் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஆனால், வடக்குமாகாணத்தைப் பொறுத்தவரையில் அரசுக்குச் சொந்தமான பல இணையத்தளங்கள் தரவுகளை புதுப்பிப்பதில்லை. இவை சீர்செய்யப்பட வேண்டும். அப்போது தான் இந்தச் சட்டம் மக்களுக்கு பயனுள்ளதாக அமையும். குறிப்பாக, தனியார் காணிகள் அபகரிப்பு உள்ளிட்ட விடயங்களை மக்கள் அறிதலில் இழுபறி நிலை காணப்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்க வேண்டும்.

தகவலை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

ஆகவே, தகவல் அறியும் சட்டம் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ச-27)

# இந்திராபுரத்தில் தொடர் திருட்டு பொலிஸார் அசமந்தப்போக்கு!

## மக்கள் விசனம்

கிளிநொச்சி, செப். 30

பளை இந்திராபுரம் கிராமத்தில் தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக ஆள்கள் இல்லாத வீடுகளைக் குறி வைத்து கைவரிசையைக் காட்டி வந்த திருடர்கள், தற்போது ஆள்கள் உள்ள வீடுகளிலும் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

நள்ளிரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து பணம், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்மோட்டர்கள் எனப் பலவற்றைத் திருடர்கள் திருடிச் செல்வதுடன் உயிர் அச்சுறுத்தலையும் விடுக்கின்றனர்.

திருட்டுகள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்தும் பொலிஸார் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். இதுவரை எந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பிலும் குற்றவாளிகளை இனங் காணவில்லை.

எனவே, இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் - என்றனர். (ச-9)


காரியாலயத்திற்கு இடம் தேவை

வடமாகாணத்தில் இயங்கும் முன்னணி நிறுவனத்திற்கு சாவகச்சேரி நகரப் பகுதியில்

காரியாலயம் அமைப்பதற்கு

இடம் வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 077 120 9972


தவிசாளர் நிரோஷுக்கு எதிரான

# மாவீரர் தின நினைவேந்தல் வழக்கு முடிவுறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 30

கடந்த ஆண்டு மாவீரர் தினத்தை நினைவேந்தியமை தொடர்பில், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டதுடன் வழக்கும் முடிவுறுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்டமை தொடர்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நேற்று புதன்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கில், அச்சுவேலி பொலிஸாரின் மேலதிக அறிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டு இடம்பெற்ற மாவீரர் தின நினைவேந்தல்களில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சட்டம் ஒழுங்கை மீறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி மல்லாகம் நீதிமன்றம் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை விடுவித்தது. (ம)

*12 பவுண்...*

திருடப்பட்டுள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

உரும்பிராய் கிழக்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த குடும்பத்தினர் தங்கியிருந்துள்ளனர். அவர்கள் நேற்று நயினாதீவுக்கு வழிபாடுகளுக்காகச் சென்றவேளை மேற்படி வீடு உடைக்கப்பட்டு நகைகள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

*கள்வர்களின்...*

பயன்படுத்திய திருடர்கள், வீட்டுக் கதவை உடைத்துச்சென்று வீடு முழுவதும் சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தி ஒருதொகுதி நகைகளை திருடிச் சென்றுள்ளனர். எனினும் அவர்கள் திருடிச் சென்ற நகைகள் 'கவரிங்' நகைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)


இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் மாந்தருடன் 18 . 11 . 1969

விண்ணுலகில் மாதவனுடன் 20 . 09 . 2020

பி.கே. பாலசிங்கம் பாலஸங்கர்

(பொது முகாமைத்துவ உதவியாளர் பிரதேசசெயலகம், உடுவில்)

திதி - சதுர்த்தி

சகலதுமாய் ஆகி நின்ற நீங்கள்
எம்மை தவிக்கவிட்டு ஈராண்டு ஆனதுவே
வாழ்க்கை நெறி எது வென்றீர் ?
வாழ்ந்து காட்டினீர் அப்பா !
சேமித்த சொத்துக்கள் உறவுகளென்று
நித்தமும் உணர்த்தி நிற்கிறீர் அப்பா !
பேரன்பால் எமை அணைத்த - உம்
ஸ்பரிசங்களை இழந்து நிற்கிறோம்,
மீண்டும் காணமாட்டோமா ?அப்பா !

718, சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## உளவள...

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

அதீத அலைபேசிப் பாவனையின் காரணமாக, இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் 16 சிறுவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உளவள சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அவர்களில் 10 பேர் சிறுமிகள். இவர்கள் 'ரிக்ரொக்' செயலியைப் பயன்படுத்தி - காலப்போக்கில் அதற்கு அடிமையாகி, பின் அதன்மூலம் காதல் வயப்பட்டு - உளநலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதர 6 சிறுவர்கள், நாளின் கணிசமான பகுதியை அலைபேசிக்குள் தொலைத்துக் கொண்டவர்கள். அலைபேசிப் பயன்பாட்டில் இருந்து மீளமுடியாத நிலையில் அவர்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதீத அலைபேசிப் பாவனை தொடர்பில் மருத்துவர்கள் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்ற அதேநேரம் தொலைபேசிப் பாவனையும் அதன் ஆபத்துக்களும் மறுபுறம் கொஞ்சம் கொஞ்சமாக மாணவர்களையும் சிறுவர்களையும் விழுங்கி வருகின்றது. அலைபேசிப் பாவனையால் சிகிச்சை பெறும் 16 பேர் இந்த வருடத்தில் மட்டும் சிகிச்சை பெறுபவர்களே. அத்துடன் இந்தப் பிரச்சினைக்குத் தாமாக முன்வந்து சிகிச்சை பெறுபவர்கள் மிகமிகக் குறைவே. எனவே அலைபேசிப் பாவனையால் தம் உளநலத்தைத் தொலைத்த மாணவர்கள் சமூகத்தில் இன்னும் பல மடங்கு இருக்கலாம். பெற்றோர் தமது பிள்ளைகளின் அலைபேசிப் பாவனை தொடர்பில் உச்சபட்சக் கவனத்துடன் இருக்க வேண்டும் - என்றனர். (அ-ம-125)

## விபத்தில்...

உயிரிழந்தார். மன்னார் வீதியூடாக துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த குறித்த முதியவரை அதே திசையில் பின்னால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியது. இதில், தாலிக்குளம் பகுதியை சேர்ந்த ராஜகோபால் (வயது - 68) என்ற முதியவர் உயிரிழந்தார்.

மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர்படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-110)

## உக்ரைனின்...

நாடுகளும் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டித்து உக்ரைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது ரஷ்யா. சுமார் 6 மாதங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த இராணுவ நடவடிக்கையில் ரஷ்யாவுக்கு ஈடுகொடுத்து உக்ரைன் போராடுகின்றபோதிலும் ரஷ்ய - உக்ரைன் எல்லையிலுள்ள சில பகுதிகள் ரஷ்யாவின் பிடியிலேயே உள்ளன. இந்த நிலையில், அவற்றில் நான்கு பகுதிகளையே இன்று ரஷ்யா தன்னுடன் இணைக்க வுள்ளது.

2014ஆம் ஆண்டு கிரிமியாவை ரஷ்யா இவ்வாறு ஆக்கிரமித்துத் தன்னுடன் இணைத்தது. இது இன்று வரையில் பதற்றமான விவகாரமாகவுள்ள நிலையில் தற்போது ரஷ்யா மேலும் நான்கு பகுதிகளை ஆக்கிரமித்து இணைக்கும் முயற்சி ஒரு பெரும் போர்முனையை ஏற்படுத்தும் என்று சர்வதேச அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

## தீக்காயங்களுக்கு...

நாகர்கோவிலைச் சேர்ந்த குறித்த பெண், குடும்பப் பிரச்சினை காரணமாக கடந்த 24ஆம் திகதி தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தீவைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து அவர் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார்.

இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26-125)

## மாணவர்களை...

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குழந்தை மருத்துவ நிபுணர் பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் நடவடிக்கையில் கூடுதல் அக்கறையுடன் இருக்க வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்காலத்தில் அலைபேசிகளின் பயன்பாடுகள் இளைஞர்களிடம் மட்டுமல்லாமல் மாணவச் சமூகத்திடமும் தீவிரம் பெற்றுள்ளன. தரம் ஒன்பதுக்கு மேற்பட்ட மாணவர்களில் 97 வீதமானவர்கள் இன்று அலைபேசிகளைச் சொந்தமாக வைத்திருப்பவர்களாக - அல்லது அதீதமாகப் பயன்படுத்துகின்றவர்களாக இருக்கின்றனர். அதிலும் குறிப்பாக 12 வயது தொடக்கம் 17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்கள் இணைய விளையாட்டுக்களில் (வீடியோ கேம்) தீவிரமாக ஈடுபடுகின்றனர். இந்த விளையாட்டுக்கள் 'சவால் நிறைந்தவை' என்ற போர்வையின் கீழ் மாணவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் அதற்கு தாமாகவே அடிமையாகின்றனர்.

இணைய விளையாட்டுக்களுக்கு சிறுவர்கள் அடிமையாகும்போது அது சிறுவர்களின் உடல் நலனில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்ரோல், நோய் எதிர்ப்புத் தன்மை குறைவடைதல், என்புத் தொகுதிகள் சார்பான நோய்கள் என்பன மாணவர்கள் மற்றும் சிறுவர்களை ஆட்கொள்கின்றன.

ஒரு மனிதன் சராசரியாக ஒரு நிமிடத்தில் 16 தடவைகள் கண்களைச் சிமிட்ட வேண்டும். இணைய விளையாட்டுக்களில் பார்வைக் குவிவைச் செலுத்தி ஈடுபடுவதால் இந்தக் கண்சிமிட்டல் 8 தடவைகளாகக் குறைகின்றன. இதனால் பார்வைக் குறைபாடு மற்றும் பார்வை இழப்பு போன்ற பிரச்சினைகளும் மாணவர்களுக்கு ஏற்படுகின்றன. எனவே பெற்றோர் தமது குழந்தைகளின் அலைபேசிப் பாவனையில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். பெற்றோரின் கண்டிப்பும் கவனக்குவிவான செயற்பாடுமே பிள்ளைகளின் உள, உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் - என்றார். (அ-ம-125)

## நான்கு...

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நவராத்திரியை முன்னிட்டு ஆலயத்துக்காகக் கட்டப்பட்டிருந்த மின் விளக்குகளை மதுபோதையில் சென்ற இருவர் உடைத்த நிலையில், அவர்களைக் குறித்த பிரதேச இளைஞர்கள் பிடித்து எச்சரித்து அனுப்பினர்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை 2 மணியளவில் வந்த ஆறு பேரைக் கொண்ட குழு அந்தப் பகுதியிலுள்ள நான்கு வீடுகள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-125)

## ஐரோப்பிய...

இந்த நிதியுதவியானது இலங்கையின் உணவு, சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்புசார் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்த நிதியுதவி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கடி முகாமைத் துவப்பிரிவு பணிப்பாளர் ஜெனேஸ் லெனார்சிஸ், 'பல மில்லியன் மக்களின் உணவுப்பாதுகாப்பு தொடர்பில் அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருக்கும் சமூக - பொருளாதார நெருக்கடியின் விளைவாக இலங்கையர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான தொரு சூழ்நிலையில் இந்தப் புதிய நிதியுதவியின் மூலம் இலங்கையிலுள்ள பின்தங்கிய மக்களுக்கான எமது ஆதரவை நாம் மீள உறுதிப்படுத்துகின்றோம்' என்று தெரிவித்துள்ளார். (அ-ம)

## இலங்கையில்...

நெதர்லாந்து தூதுவர் போனி ஒபார்க்.

கொழும்புப் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகாலமாகப் போர் நிலவிய இலங்கை போன்றதொரு நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதென்பது மேலும் சவாலானதொரு விடயமாகும். அங்கு பரஸ்பர நம்பிக்கை, புரிந்துணர்வு மற்றும் மரியாதை ஆகியவற்றுடன்கூடிய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படுவதற்கு பல வருடங்களோ அல்லது பல தசாப்தங்களோ அல்லது பல சந்ததிகளோ ஆகலாம்.

அதற்கு கால அவகாசமும் வளங்களும் அர்ப்பணிப்பான தன்மையும் இன்றியமையாதனவாகும். அதுமாத்திரமன்றி அதற்கு சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும் தைரியமாக அடியெடுத்து வைக்கவேண்டியது அவசியமாகும். அந்தவகையில் இங்குள்ள அனைத்துப் பெண்களும் அந்த அடியை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

போரின் விளைவாக இனங்களுக்கிடையில் பிரிவினைவாதம் மிக ஆழமாக வேரூன்றியிருக்கும் இலங்கையில், சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அனைத்துத்தரப்பினரும் உண்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் ஒன்றிணையவேண்டியது அவசியமாகும்.

இந்த நல்லிணக்கப் பொறிமுறைக்கு ஏதுவான பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குவதுடன் அதற்குத் தலைமை தாங்கவேண்டிய முக்கியமான கடமை அரசாங்கத்துக்கு இருக்கின்றது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதேவேளை இந்தவிடயத்தில் எமக்குள்ள கடமையை நாம் உரியவாறு நிறைவேற்றவேண்டும்.

மேலும் எந்தவொரு நாட்டிலும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு சமூகங்களுக்கு இடையிலான நம்பிக்கை என்பது இன்றியமையாததொரு காரணியாகும். இருப்பினும் தற்போது அது போதுமானதாக இல்லை.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு அதுவும் அடிப்படைக்காரணமாக இருக்கக்கூடும். ஆனால், தெற்காசியகொள்கை மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனத்தின் செயற்றிட்டம் மூலம் மீண்டும் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (அ-ம)

## தமிழரைத்...

யிலான அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும்' என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருந்தார். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் 'உதயன்' பத்திரிகையிடம் நேற்றிரவு கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தமிழ் மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இதில் முதன்மையானது தேசிய இனப்பிரச்சினை. 1949ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தீர்வு விடயம் சம்பந்தமாக தமிழ்த் தரப்பினர் திறந்த மனதுடன் இலங்கை அரசுடன் பேச்சை நடத்தியுள்ளனர்; ஒப்பந்தங்களையும் செய்துள்ளனர். கொழும்பிலும், சென்னையிலும், டில்லியிலும் மற்றும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற பேச்சின்போது நியாயமான கோரிக்கைகளை இலங்கை அரசுகளிடம் தமிழ்த் தரப்பினர் முன்வைத்திருந்தனர்.

ஆனால், அந்தக் கோரிக்கைகள் இலங்கை அரசுகளால் நிராகரிக்கப்பட்டிருந்தன. தமிழ்த் தலைவர்களுடன் செய்துகொள்ளப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்கள் இலங்கை அரசுகளால் கிழித்தெறியப்பட்டும் உள்ளன.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுடன் தீர்வு விடயம் தொடர்பில் 17 சுற்றுப் பேச்சைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்தியிருந்தனர்.

18ஆவது சுற்றுப் பேச்சுக்குச் சென்ற நாம், காத்திருந்து ஏமாந்து வந்தோம். அந்தப் பேச்சு மேசைக்கு மஹிந்த அரசு வரவில்லை. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசில் தீர்வுக்கான பேச்சை முன்னெடுக்கப் பலவிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அரசியல் சதியால் அவையும் தோல்வியில் முடிவடைந்தன.

ஆனபடியால், 'நாங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றோம்; அதற்கான பேச்சு விரைவில் ஆரம்பிக்கப் போகின்றோம்' என்று இலங்கை அரசு தொடர்ந்து கூறி மேலும் எங்களைக் காத்திருக்க வைக்காமல், ஏமாற்றாமல் ஒரு முறையான ஒழுங்கின் பிரகாரம் பேச்சை ஆரம்பிக்கவேண்டும்; பிரச்சினைகளுக்கு விரைந்து நியாயமான தீர்வைக் காணவேண்டும்.

பிரச்சினைகளை அரசு விரைவாகத் தீர்க்காவிட்டால் உள்ளக சுயநிர்ணய உரிமை எமக்கு மறுக்கப்படுகின்றது என்றே அர்த்தம். அதன் நிமித்தம் வெளியக சுயநிர்ணய உரிமையை நாங்கள் நாட வேண்டிவரும்' - என்றார். (அ-ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 • 07 • 1948



மறைவு 15 • 09 • 2022

கடந்த (15.09.2022) அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் திருநாவுக்கரசு பாலகிருஷ்ணன்
(நாதஸ்வர வித்துவான்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.09.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் நாளை (01.10.2022) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி ஊடாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

(escs 21004) (2.6)

## கட்டடம் வாடகைக்கு

சுன்னாகம் K.K.S. வீதியில்
மூன்றாவது மாடி தளம்
வாடகைக்கு விடப்படும்.

077 398 5120

(cs 46743) (2.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.(50m தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீருற்று நிலம் நல்ல சூழல்
- வீடுகள். திருமண மண்டபங்கள் அமைக்க ஏற்ற இடம்.
- கைதடி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 10 லட்சம் ரூபா மட்டும்.

தரகர் தேவையில்லை . பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00 0776585999

## தேவை

**யாழ்நகரில்** இயங்கிவரும் எமது **புடைவை நிறுவனத்தில்** காணப்படும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை.

1. காட்சியறை முகாமையாளர் -01 முன் அனுபவம் தேவை.
2. Digital Marketing Officer - 01
3. விற்பனையாளர் - ஆண் - 02, பெண் - 02

தொடர்புகளுக்கு: 077 845 4840

## வேலைவாய்ப்புக்கள்

வவுனியா நெளுக்குளத்தில் இயங்கிவரும் **கால்நடைப் பண்ணையில்** கீழ்வரும் பணிவெற்றிடங்களுக்கு தங்கி நின்று பணியாற்றக்கூடிய வேலையாட்கள் உடன் தேவை.

* சமையல் வேலை (ஆண்/ பெண்)
* தோட்டவேலை (ஆண்/பெண்)
* சாரதி வேலை (உழவு இயந்திரம் - ஆண்)
* கால் நடை பராமரிப்பு (ஆண்/பெண்)
* பழுது பார்த்தல் (வயறிங். தச்சுவேலை. வெல்டிங். பெயின்டிங் - ஆண்)
* வீடு பராமரித்தல் (ஆண்/பெண்) குடும்பமாகத் தங்கி நிற்கவேண்டும்
* வயது 35 - 55 வயது வரை
* சம்பளம் வேலைக்கும். தகுதிக்கும் ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(cs 1032) (2.6)

தொடர்புகளுக்கு: 076 409 0828


# 78 வீத மாணவர்களுக்கு ஒருவேளை உணவு!

## கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவிப்பு

கொழு.செப். 30

நாட்டிலுள்ள பாடசாலைக் கட்டமைப்பில் 78 வீதமான மாணவர்களுக்கு ஒருவேளை உணவு வழங்கப்படுகின்றது என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மஹிந்த யாப்பா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-தற்போது 7 ஆயிரத்து 925 பாடசாலைகளில் உணவு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ஏனைய பாடசாலைகளுக்குத் தனியார் பிரிவினரின் ஒத்துழைப்புடன் போஷாக்கு செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வீடுகளிலிருந்து கொண்டுவரப்படும் மாணவர்களின் உணவுகளின் போஷாக்கு தொடர்பில் கண்காணிக்குமாறும் ஆசிரியர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

(ஒ-14-இ)


## மரண அறிவித்தல்



பிறப்பு 1937 08 29

இறப்பு 2022 09 29

### கணபதிப்பிள்ளை நடராசா
(முன்னாள் உரிமையாளர், சிங்கம் பீடா ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **கணபதிப்பிள்ளை நடராசா** நேற்று (29.09.2022) வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற கைலாம்பிகையின் (ராணி) அன்புக் கணவரும், முத்தையா மீனாட்சி தம்பதியரின் மருமகனும், கவிதா (ஆசிரியர், யா / அருணேதயாக் கல்லூரி), விஜிதா, சிவரூபன் (உரிமையாளர், Rajarani Electricals and Hardware, Mallakam), ஜெயரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், நானாட்டான் பிரதேசசபை - மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயானந்தன் (மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்), சுலக்ஷினி (ஆசிரியர், யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், கேனிசா, சயானி ஆகியோரின் பாசமிகு பேரனும், தவமணி (கனடா), காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், குணசிங்கம், சிவபாக் கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புக்கு :-
0212059073, 0776544521

தகவல்:
குடும்பத்தினர்.


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.